## IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

## METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

**O.S.No.56/2023**
**CNR.No.TNCB19000**

Date,19.08.2025 DW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சரவணன் | **வயது** | 56 |
| த/பெ | சென்னியப்பன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காரமடை | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 19th August 2025

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

26.03.2015 ம் தேதி அன்று நான் ஒப்பந்தப்படி வேலை செய்து கொண்டிருந்த கட்டிடத்தில் வாதி பணி செய்து கொண்டிருந்தபோதுதான் வாதிக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஒப்பந்தமே போடவில்லை. மேற்சொன்ன தேதியில் ரேணுகாதேவி மண்டபத்தில் கட்டிட பணி நடந்து கொண்டிருந்தது என்று சொன்னால் சரிதான். நான் அங்கு இல்லை. கட்டிட பணி செய்ய கட்டிட உரிமையாளரிடம் நான் ஒப்பந்தம் போட்டிருந்தேன் என்றால் சரியல்ல. கட்டிடத்தின் உரிமையாளர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு உதவி செய்தேன். கட்டிட பணி மேற்கொள்ள உரிமையாளரிடம் பணத்தை வாங்கிக்கொண்டுதான் பணி மேற்கொண்டேன் என்றால் சரிதான்.

ஒரு சதுரடிக்கு எவ்வளவு ரூபாய் என்று பேசி கட்டிட பணி மேற்கொண்டேனா என்றால் விவர அறிக்கையை சொன்னேன். வேலை முடிந்ததும் எவ்வளவு என்று சொல்வேன். எத்தனை மாதத்தில் கட்டிட பணியை மேற்கொள்ள கால வருடம் நிர்ணயிக்கப்பட்டது என்றால் 8 மாதம் நிர்ணயிக்கப்பட்டது. 8 மாதத்தில் எந்தெந்த பணிகளை இந்த சமயத்தில் மேற்கொள்ளப்படுமென கால நிர்ணயம் செய்தேனா என்றால் இல்லை.

நான் பதிவு செய்த ஒப்பந்ததாரர். நான் பதிவு செய்த ஒப்பந்ததாரர் என்ற அடிப்படையில் என்ன என்ன பணிகளை செய்து வந்தது குறித்து ஒரு பதிவேடு ஒன்றை பராமரித்து வரவேண்டும் என்றால் சரியல்ல. நான் வருமானவரி கட்டக்கூடிய நபர் என்றால் சரிதான். 2015-2016 ஆண்டிற்கான கால கட்டத்தில் வருமானவரி செலுத்தி உள்ளேன் என்றால் சரிதான். 2015-2016 ஆண்டிற்கான வருமான வரி ரிட்டர்ன்ல் ரேணுகா தேவி மண்டப பணிகளுக்கான வருமானத்தை சொல்லியிருக்கிறேனா என்றால் அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. என்னுடைய வருமானத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

ரேணுகாதேவி மண்டபத்தின் கட்டிட பணியை மேற்கொண்டதால் எனக்கு வந்த வருமானத்திற்கு சம்பந்தம் உண்டு என்றால் சரியல்ல. நான் திட்டமிட்டு வருமானவரி செலுத்தாமல் அரசாங்கத்தை ஏமாற்றியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு 26.03.2015 அன்று ஏற்பட்ட விபத்திற்காக முதலுதவி சிகிச்சை செய்த வகையில் எனக்கு எவ்வளவு செலவானது என்றால் ரூ. 50,000/- ஆனது. அந்த பணத்தை கட்டிட உரிமையாளரிடம் வாங்கி கொடுத்தேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் 6-வது பாராவில் சிகிச்சைக்குண்டான செலவு ரூ. 25,000/- த்தை நான் கடன் வாங்கி செய்தேன்., வாதி எதுவும் தரவில்லை என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.08.19 19:37:01 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.